# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - நவம்பர் 1, 2025 Weekly E-paper ● November 1, 2025





## மூன்றாந்தரப் பேச்சாளரா மோடி?

சுப. வீரபாண்டியன்

## Sir, "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி"

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

## தமிழ்நாட்டில்... காலியில்லை

தலையங்கம்

## வசிஸ்ட - விஸ்வாமித்திரர் இடையில் திரிசங்கான விஜய்!

எழில். இளங்கோவன்

# கருஞ்சட்டைத் தமிழர்


ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - நவம்பர் 1, 2025 Weekly E-paper ● November 1, 2025


# மூன்றாந்தரப் பேச்சாளரா மோடி?

சுப. வீரபாண்டியன்

"காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தால், உங்களிடம் இரண்டு எருமை மாடுகள் இருந்தால், அவற்றுள் ஒன்றை எடுத்துக் கொண்டு போய் விடுவார்கள்", என்று 2024 ஆம் ஆண்டு தேர்தல் பொதுக்கூட்டம் ஒன்றில், குஜராத்தில், மாடுகள் வளர்க்கும் மக்கள் மிகுதியாக வாழும் பகுதியில் பேசியவர் யார் தெரியுமா?



இன்றைய பிரதமர் நரேந்திர மோடியேதான்! 2024 மே 1 ஆம் நாள் நடைபெற்ற கூட்டத்தில்தான் அவர் அவ்வாறு பேசினார்!

இப்படித் தரம் தாழ்ந்து ஒரு பிரதமர் வேட்பாளர் பேசலாமா என்று அன்று அனைவரும் குரல் எழுப்பினார்கள். ஊடகங்களில் சிலவும் கண்டனம் செய்தன.

ஆனால் அவர் மாறவே இல்லை. பிரதமர் ஆன பிறகும், இப்போதும், அவர் அப்படித்தான் பேசிக் கொண்டிருக்கிறார்.

அதற்கான எடுத்துக்காட்டு தான், அண்மையில் பீகார் தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் அவர் பேசியிருக்கும் ஒரு பேச்சு!

தமிழ்நாட்டில் உள்ள திமுக அரசு, பீகாரின் உழைக்கும் மக்களைத் துன்புறுத்துகிறதாம்!

இதற்கு எந்தச் சான்றையும் அவர் எடுத்துக்காட்ட வில்லை. எங்கே, எப்போது, பீகார் உள்ளிட்ட வடநாட்டு மக்களைத் திமுக அரசு துன்புறுத்தியது என்பதற்கு ஒரு நிகழ்ச்சியையும் அவர் கூறவில்லை. எந்த ஆதாரமும் இல்லாமல், பொத்தாம் பொதுவில் ஒரு குற்றச்சாட்டை அவர் முன் வைத்திருக்கிறார்.

அது சரி, பீகார் தேர்தலுக்கும் திமுகவிற்கும் என்ன தொடர்பு? திமுக இந்தியா கூட்டணியில் இடம்பெற்றிருக்கிறது. பீகாரில் இந்தியா கூட்டணியை வீழ்த்துவதற்கு, அதில் ஓர் அங்கமாக இருக்கிற திமுகவைக் குறை சொல்வதன் மூலம், தன் கட்சி பயன்பெறக்கூடும் என்று அவர் கருதி இருக்கலாம்!

பீகாரில் பாஜக தலைமையில் இருக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு நம்பிக்கை குறைந்து கொண்டே போகிறது ! அதன் விளைவுதான் இப்படிப்பட்ட உண்மையற்ற பேச்சுகள் !

இந்தக் கூற்றில் உண்மை இல்லை என்பது மட்டுமின்றி, இதற்கு எதிரான உண்மைகளே நடப்பில் இருக்கின்றன என்பதை நாம் அறிவோம் ! கொரோனா காலத்தில், பீகார், உ.பி. போன்ற மாநிலங்களில் இருந்து தமிழ்நாட்டிற்கு வந்த ஏழைத் தொழிலாளர்கள் பத்திரமாகத் தங்கள் ஊர்களுக்குத் திரும்பிச் செல்ல, தமிழ்நாடு அரசு பல உதவிகளைச் செய்தது என்பதை நாடு அறியும் !

ஒரு கட்சியின் மூன்றாம் தரப் பேச்சாளர் பேசுவது போல, இந்திய அளவிலான ஒரு பெரிய கட்சியின் தலைவர், அதிலும் இந்தியாவின் பிரதமர், இப்படித் தரம் தாழ்ந்து பேசுவது, அவருக்கும் நல்லதில்லை, அவர் கட்சிக்கும் நல்லதில்லை!

●

# Sir, "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி"

**வழக்கறிஞர் இராம.வைரமுத்து**

பீகாரைத் தொடர்ந்து தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (Special Intensive Revision - SIR) மேற்கொள்ளப்பட இருப்பதாக தேர்தல் ஆணையம் அண்மையில் அறிவித்துள்ளது. தகுதி வாய்ந்த ஒரு குடிமகன் கூட வாக்குரிமை பெறாமல் இருந்து விடக் கூடாது என்பதற்காக SIR மேற்கொள்ளப்படுவதாக தலைமைத் தேர்தல் ஆணையர் கூறியுள்ளார்.

ஆனால் பீகாரில் SIR மேற்கொள்ளப்பட்ட பிறகு அம்மாநிலத்தின் மொத்த வாக்காளர் எண்ணிக்கை 6% குறைந்துள்ளது. வாக்காளர் பட்டியலில் இருந்து 47 லட்சம் பேர் நீக்கப்பட்டுள்ளனர். 21 லட்சம் பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். இறுதி வாக்காளர் பட்டியலில் 7.42 கோடி பேர் இடம்பெற்றுள்ளனர். இதன் மூலம் SIR மேற்கொள்ளப்படுவதற்கு தலைமை தேர்தல் ஆணையர் கூறும் காரணம் சரியானது அல்ல என்பதை உணர முடிகிறது.

இந்தியாவில் கடந்த 1951 முதல் 2004 வரை வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணி 8 முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடைசியாக 2002-04 காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. முந்தைய 8 முறையும் வாக்குரிமை மட்டுமே சரி பார்க்கப்பட்டது. தற்போது குடியுரிமையை சரி பார்ப்பது தான் இதன் உண்மையான நோக்கம். அதற்காகவே 11 ஆவணங்கள் சரிபார்க்கப்படுகிறது. அசாம் மாநில மக்களின் குடியுரிமை ஏற்கெனவே சரிபார்க்கப்பட்டு தேசிய குடிமக்கள் பதிவேடு (NRC) அமல்படுத்தப்பட்டுள்ளதால் அங்கு SIR மேற்கொள்ளப்படவில்லை.

உச்சநீதிமன்றத்தின் உத்தரவுக்குப் பிறகு ஆதார் அட்டை 12வது ஆவணமாக இதில் சேர்க்கப்பட்டாலும் திருத்தப் பணியின்போது, ஆதார் அட்டை ஓர் அடையாள ஆவணமாக மட்டுமே ஏற்கப்படும். குடியுரிமை, பிறந்த தேதிக்கான சான்றாக ஏற்கப்படாது என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

ஒவ்வொரு வாக்குச்சாவடியின் தேர்தல் அலுவலர் (BLO) வீடு வீடாகச் சென்று படிவங்களை வழங்கி வாக்காளர்களின் விவரங்களை சேகரிப்பார். அப்போது




2002-2004 இக்கு முன்பு வாக்காளர் பட்டியலில் பெயர் இருப்பவர்கள் எந்த ஆவணமும் தரத் தேவை இல்லை.1987 ஆம் ஆண்டுக்குப் பிறகு பிறந்தவர்கள் அனைவரும் SIR இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு ஆவணத்தையும், பெற்றோர் யாரேனும் ஒருவருடைய ஆவணத்தையும் கொடுக்க வேண்டும். 2004 ஆம் ஆண்டுக்குப் பிறகு பிறந்தவர்கள் தங்களுடைய ஆவணம் மற்றும் பெற்றோர் இருவரின் ஆவணத்தையும் கொடுக்க வேண்டும். அதன் அடிப்படையில் வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.

வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாமல் விடுபட்டவர்கள் தகுந்த ஆவணங்களுடன் மாவட்ட ஆட்சியரிடம் முதல் மேல்முறையீடு மற்றும் மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் இரண்டாவது மேல்முறையீடு செய்யலாம். தற்போது SIR மேற்கொள்ளப்பட இருக்கிற 12 மாநிலங்களில் தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, மேற்கு வங்காளம் ஆகிய நான்கு மாநிலங்கள் இன்னும் ஆறு மாத காலத்தில் சட்டமன்றத் தேர்தலை சந்திக்கிறது. அப்படி இருக்கையில் இங்கு நீக்கப்படும் வாக்காளர்கள் மேல்முறையீடு செய்வதற்கான கால அவகாசம் குறைவாகவே உள்ளது. அதற்குள்ளாகவே

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## தமிழ்நாட்டில்...காலியில்லை



சில கடைகளில் 'இங்கு வேலை காலியில்லை' என்று எழுதி வாயிலில் தொங்கவிட்டு இருப்பதைப் பார்த்திருக்கிறோம்.

பீகார் தேர்தல் பிரச்சாரத்தின்போது இதேபோல அமித்ஷாவும் பேசியிருக்கிறார். பீகாரில் முதலமைச்சர் பதவி காலியில்லை நாடாளுமன்றத்தில் பிரதமர் பதவியும் காலியில்லை என்று தேஜஸ்வியையும், ராகுல்காந்தியையும்நையாண்டிசெய்துபேசியிருக்கிறார்.

தொகுதிப் பங்கீடு, முதலமைச்சர் வேட்பாளர் யார்? போன்றவைகளில் கருத்தொற்றுமை இல்லாமல் குழப்பத்தில் இருக்கும் பாஜகவின் அமித்ஷா, பிரதமர் மற்றும் முதல்மைச்சர் பதவிகளை ஏலம் போடுவதுபோல பேசியிருக்கிறார்.

பீகாரில் தேர்தலில் வாக்காளர் திருத்தம் செய்கிறோம் என்று சொல்லி, வாக்காளர் பட்டியலில் இருந்து 65 லட்சம் வாக்காளர்களை காலி செய்துள்ளது தேர்தல் ஆணையம். இதை மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

பீகார் இன்னமும் பின்தங்கிய மாநிலமாக, கல்வி – மருத்துவத்தில் பின்தங்கிய நிலையில், வேலையில்லாத்திண்டாட்டமும் இருக்கிறது.

பீகாரின் வளர்ச்சியில் கருத்து செலுத்த வேண்டியதை விட்டுவிட்டு சீதைக்குக் கோயில் கட்டுவோம் என்று சொல்லத் தொடங்குவதாக செய்திகள் வருகின்றன.

அறிவார்ந்த கல்வி, கேள்விகளின் மூலம் மக்களை வளர்த்தெடுப்பதைவிட்டுவிட்டு, மதத்தை மட்டுமே அரசியல் மூலதனமாகப் பார்க்குப் பார்வை, நீண்டகாலம் தாக்குபிடிக்காது.

தேர்தல் மூலம் இந்தியா கூட்டணி வெல்லும், ராகுல்காந்தி பிரதமர் ஆவார்.

பீகார் முதலமைச்சர் பதவி காலியில்லை என்று சொன்ன அமித்ஷாவுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் பதவி பாஜகவுக்கு காலியாக என்றும் இல்லை என்று தமிழ்நாடு முடிவு செய்துவிட்டது.

உதயசூரியன் உலகை வாழ்விக்கும். தாமரையால் என்ன பயன்? காலையில் மலரும், மாலையில் அடங்கிவிடும்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## முன்பக்கத் தொடர்ச்சி...

தேர்தல் நடைமுறைகள் தொடங்கி விடும். அதன் பிறகு அவர்களால் தங்களை வாக்காளர் பட்டியலில் இணைத்துக் கொள்ள இயலாது.

SIR நடைமுறை நாடு முழுவதும் ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்படவில்லை என்பதால் உடனடியாக சட்டமன்றத் தேர்தலை சந்திக்கிற மாநிலங்களில் தேர்தலுக்குப் பிறகு போதிய கால அவகாசத்துடன் விரிவாக மேற்கொள்ளலாம். அப்படியில்லாமல் உடனடியாக அவசரகதியில் இதை மேற்கொள்வது பாஜகவுக்கு ஆதரவாக அமையும் என்ற சந்தேகம் வலுப்படுகிறது. பீகாரில் நடத்தப்பட்ட SIR இல் பா.ஜ.கவுக்கு ஆதரவான வாக்குகள் சேர்க்கப்பட்டதையும், அதற்கு எதிரான வாக்குகள் நீக்கப்பட்டதையும் இந்தியா கூட்டணியின் முதல்வர் வேட்பாளர் தேஜஸ்வி ஆதாரத்தோடு வெளிப்படுத்தினார்.

அதனால் தான் தி.மு.கவும் அதன் கூட்டணி கட்சிகளும் இந்த நடைமுறையை எதிர்க்கிறது. தி.மு.க இது குறித்து ஆலோசிக்க நவம்பர் இரண்டாம் தேதி அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறது. பாஜக எதைச் செய்தாலும் அதைக் கண்மூடித்தனமாக ஆதரிக்கிற அ.தி.மு.க SIR நடைமுறையை வரவேற்கிறது.

தி.மு.க அக்கட்சியின் வழக்கறிஞர் அணியினருக்கும், வாக்குச்சாவடி முகவர்களுக்கும் (BLA2) SIR குறித்தும், அதை எவ்வாறு எதிர்கொள்வது என்றும் ஏற்கனவே பயிற்சி அளித்து இருக்கிறது. அந்த நம்பிக்கையில் தான் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" என்ற முழக்கத்தை வைத்துள்ளார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

# வசிஸ்ட - விஸ்வாமித்திரர் இடையில் திரிசங்கான விஜய்!

**எழில். இளங்கோவன்**

அரபிக் கடலில் மையம் கொண்டு காற்றழுத்தத் தாழ்வுநிலையில் இருந்த புயல், மோந்தா என்ற பெயரோடு ஆந்திராவில் பெரும் சேதத்தை ஏற்படுத்திக் கரை கடந்து அமைதியாகிவிட்டது, என்பது செய்தி.

சென்னையில் மையம் கொண்டு அரசியல் தாழ்வுநிலையில் இருந்த தவெக என்ற கட்சி, நாற்பத்துஓர் உயிர் சேதத்தை ஏற்படுத்திவிட்டுக் கரூரைக்கடந்து சென்னையில் அமைதியாகிவிட்டது, என்பதும் செய்திதான். இந்தச் செய்திக்கு நடுவில் கொஞ்சம் அரசியலும் இருக்கிறது.

முதலமைச்சர் நாற்காலி எனக்குரியது என்கிறார் எடப்பாடியார். இல்லல்ல அது 'என்னிதி' என்கிறார் நடிகர், தவெக தலைவர் விஜய். இது இப்படியிருக்க தவெகவுடன் கூட்டு, பிள்ளையார்சுழி போட்டாச்சி என்று எடப்பாடி சொல்ல, ஆமாமா, விஜய் இங்கே இருப்பது தான் பாதுகாப்பு என்கிறார் ராஜேந்திர பாலாஜி, விஜய் அதிமுகவுடன் வரவேண்டும் என்று ஆர். பி.உதயகுமாரும் கூறிவிட்டார். ஒரு சோகத்தில் இருந்து கட்சியை, அதன் தலைவரை இப்படி 'மாங்கு மாங்கு' என்று ஏன் அதிமுக அழைக்கிறது? விடை மிக எளியது, தெளிவானது.

எம்ஜிஆர், ஜெயலலிதா காலங்களில் வலிமையாக இருந்த அதிமுக இப்போது சிதறு தேங்காய் ஆகிவிட்டது. ஓ.பன்னீர்செல்வம், டி.டி.வி.தினகரன், சசிகலா, எடப்பாடி பழனிச்சாமி ஆகியோர் விகிதாச்சார அளவில் பங்குபோட்டுக் கொண்டார்கள். இதில் எடப்பாடிக்குக் கொஞ்சம் கூடுதல் பங்கு, அவ்வளவுதான். இதைக் கடந்த நாடாளுமன்றத் தேர்தல் மூலமும், ஈரோடு இடைத்தேர்தல் மூலமும் தெளிவாகச் சொல்லி விட்டார்கள் வாக்காளப் பெருமக்கள், அதிமுக செல்வாக்கு சரிந்துவிட்டது என்று. அதனால்தான் நீரில் தத்தளிக்கும் ஒருவன் எதைக் கண்டாலும் பிடித்து கரையேறத் துடிப்பது போல எடப்பாடி, அமித்ஷா கையைப் பிடித்தார். இப்போது விஜய் கையைப் பிடிக்க முயல்கிறார்.

இது இப்படியென்றால் அண்ணாமலை, தமிழிசை சௌந்தரராஜன், எச்.ராஜா போன்றவர்கள் மூலம் விஜய்க்குத் தூண்டில் போட்டுப் பார்த்தார் அமித்ஷா. ஒன்றும் படியவில்லை. சிபிஐயிடம் கரூர் சம்பவம் இருக்கும் நிலையில், தமிழ் நாட்டில் விஜயுடன் கூட்டணியா? என்ற கேள்விக்கு 'தேசிய ஜனநாயகக் கூட்டணியைத் தமிழ்நாட்டில் விரிவுபடுத்த விரும்புகிறோம். அதுகுறித்து கூட்டணி கட்சிகளிடம் பேசி முடிவெடுப்போம்' என்று பட்டும், படாமலும் சொல்லி இருக்கிறார் அவர். அவருக்குத் தெரியும் பாஜகவை தமிழர்கள் ஏற்கமாட்டார்கள் என்று. எடப்பாடிக்குத் தெரியும் தான் இந்தத் தேர்தலில் கரையேறப்போவதில்லை என்று.

அதிமுகவுடன் கூட்டா என்ற கேள்விக்கு 'போன மாதம்வரை எடுத்த நிலைதான் இன்னமும் தொடர்கிறது' என்கிறார் தவெக இணைப் பொதுச் செயலாளர் நிர்மல் குமார். 'கூட்டணி உண்டு' என்றோ, 'கூட்டணி இல்லை' என்றோ அவர் கூறவில்லை என்பது கவனிக்கத் தக்கது.

கூட்டிக் கழித்துப் பார்த்தால், விசுவாமித் திரருக்கும், வசிஸ்டருக்கும் இடையில் அந்தரத் தில் தொங்கிக்கொண்டு இருக்கும் திசங்குவின் நிலைமை இப்போது விஜய்க்கு ஏற்பட்டு விட்டது. பார்ப்போம், என்னதான் நடக்கப்போகிறது என்று! ●





**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 25-10-2025 அன்றும், துணை முதல்வர் உதயநிதி அவர்களை 27-10-2025 அன்றும் திரைப்பட இயக்குநர் எஸ்.பி.முத்துராமன் அவர்களும், திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களும் சந்தித்து தங்களின் தந்தையார் பெரியார் பெருந்தொண்டர் காரைக்குடி இராம.சுப்பையா அவர்களின் 118ஆம் பிறந்தநாள் விழாவின் அழைப்பிதழை வழங்கினார்கள். அப்போது உடன் பேரவைப் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ், பொருளாளர் செல்வின் ஆகியோர் உடன் இருந்தார்கள்.**